இதழ்-67

01.01.2024

# தமிழ்

பல்சுவை மின்னிதழ்



## பெருவெள்ளத்திற்கான பயணம்

www.thumi.org
thumi2016@gmail.com
www.facebook.com/Thumi06

ஆசிரியர்
ச. சந்தோஷன்

இணை ஆசிரியர்கள்
ஐ.வி. மகாசேனன்
இ. வினோஜன்

திறனாய்வாளர்கள்
கு. கீர்த்தனன்

வடிவமைப்பாளர்
வ. குணநீதன்

செய்தியியலாளர்
ந. மயூரன்

## இவ்விதழில் துமித்துளை...

03 போதையைத் தொடாத ஆண்டாகட்டும் 2024
07 தமிழரின் தனித்துவம் பொங்கல்
11 சிவத்தமிழ் விருது பெறும் பெருந்தகைகள்
12 வற் வலி
13 சித்திராங்கதா
19 நல்லூர்க் காவியம் நிறைவடைகிறது
23 காணாமல் போன தக்காளி
24 கிளிநொச்சியில் நடமாடும் நூலகம்
25 சிதைக்கப்படும் சிலைகள்
28 மத வழிபாடுகளில் உள ஆற்றுப்படுத்தல்
33 தற்கொலைகளால் தடமழியும் தலைமுறைகள்
37 படம் பேசும் கிரிக்கெட் 2023

வாசகர்கள் அனைவருக்கும்
இனிய புத்தாண்டு மற்றும்
தைத்திருநாள்
நல்வாழ்த்துக்கள்



# போதையைத் தொடாத ஆண்டு ஆகட்டும் 2024




கடந்த ஆண்டு துமியின் புத்தாண்டு வாழ்த்துச் செய்தியில் எல்லோரும் பொருளாதார நெருக்கடிகளில் இருந்து மீண்டு தங்கள் சொந்தக் காசில் பொங்கும் நிலை வரவேண்டும் என்கிற எங்கள் பிரார்த்தனையை முன்வைத்து இருந்தோம். பொருளாதாரப் பேரலைக்கு எதிராக நீந்திக் கரையேறும் முயற்சியில் எதிர்பாராத பல சூறாவளிகளை சமாளிக்க வேண்டி இருந்தது. அதில் முக்கியமானது போதைப்பொருள் பாவனை.

போதை என்றால் என்ன? அதன் விபரீதம் எப்படிப்பட்டது? என்பதை அறியாமலே போதை பாவனையில் ஈடுபடுகிறார்கள். போதை என்பது தன்னிலை மறக்கச் செய்து மனிதனின் சுய நிலையை சீர்குலைத்து, புத்தியை மயங்க வைத்து, நல்வாழ்வுக்கு பங்கம் விளைவிக்கிறது. இது தனிமனிதனை மட்டும் பாதிக்கும் பழக்கம் அல்ல. இதனால் அவரைச் சுற்றியுள்ள சமுதாயமும் பாதிப்படைகிறது. குடும்பத்தகராறு, கடத்தல்கள், கொலை, கொள்ளை, தற்கொலை, சிறுவர் பெண்கள் மீதான பாலியல் வன்முறைகள் மற்றும் வெறிக்கொலைகள், வாள்வெட்டு வன்முறை, வாகன விபத்துக்கள், கணினிக் குற்றங்கள், பாதாள உலகக் கோ'டியினருக்கிடையிலான மோதல்கள் என சாதாரண வீட்டு மட்டத்தில் ஆரம்பித்து கிராமம், நகரம், பிரதேசம், மாவட்டம் மாகாணம், நாடு, அயல்நாடு, சர்வதேசம் வரை அதன் தாக்கம் பாரிய அளவில் பேசப்படும் நிலை உருவாகியுள்ளது.

முன்னைய காலத்தில் ஒரு சில வகையிலான போதைப்பொருட்களே பாவனையில் இருந்தாலும் தற்போது புதுப்புது போதைப்பொருட்கள் நாளுக்கு நாள் அதிகரித்து வருவதை காணக்கூடியதாக இருக்கின்றது. இவற்றுள் சிறு பிள்ளைகள் உண்ணக்கூடிய உணவு வகைகள் முதல் பல இலட்சக்கணக்கான பெறுமதி வாய்ந்த இரசாயனங்கள் வரைக்கும் உள்ளன.

மன அழுத்தத்தினை ஏற்படுத்தக் கூடியவை, தூண்டிகளாக செயற்படக்









கூடியவை, கஞ்சா சார்ந்த உற்பத்திப் பொருட்கள், மாயத் தோற்றத்தினை உண்டு பண்ணக் கூடியவை, அபின் சார்ந்த உற்பத்திகள், தடை செய்யப்பட்ட ஊக்கமருந்துகள் என ஆறு வகைக்குள் போதைப்பொருட்களை உள்ளடக்க முடியும்.

மேற்கத்திய நாடுகளில் போதைப் பழக்கத்திற்கு அடிமையானவர்களின் எண்ணிக்கை தற்போது சதவிகிதத்தின் அடிப்படையில் குறையத் தொடங்கியுள்ள நிலையில் ஆசிய நாடுகளில் போதைப்பொருளுக்கு அடிமையானோரின் வீதம் அதிகமாகிக் கொண்டே செல்கின்றமை துரதி'டமானதாகும்.

இலங்கையின் திறந்த பொருளாதாரக் கொள்கை, உல்லாசப் பயணிகளின் வருகை என்பனவற்றால் நவீன போதைவஸ்துக்கள் நாட்டினுள் பிரவேசிக்க வழிவகுத்தன. இலங்கையை பொறுத்தவரையில் நவீன போதைவஸ்துக்கள் 1980ஆம் ஆண்டளவில் பரவத் தொடங்கின. இலங்கையில் முதலாவது ஹெரோயின் விற்பனையாளர் 1981ஆம் ஆண்டு மே மாதம் 26ஆம் திகதி 270 கிராம் ஹெரோயினுடன் களுத்துறை மாவட்டத்திலுள்ள ஓர் ஊரில் கைது செய்யப்பட்டார்.

கடந்த மூன்றாண்டு காலமாக 6 லட்சம் பேர் போதைவஸ்து பாவனை காரணமாக உயிரிழந்துள்ளதாக ஐக்கிய நாடுகள் சபை அறிக்கை வெளியிட்டுள்ளது.

போதைவஸ்து பொருட்கள் பாவிப்பது, கடத்துவது, வைத்திருப்பது போன்றவற்றுக்கு எதிராக கடுமையான சட்டங்கள் அமுல்படுத்தப்பட்டுள்ளன. அநேகமான நாடுகளில் இவற்றுக்கு மரண தண்டனை விதிக்கப்படுகிறது. இலங்கையிலும் போதைவஸ்து கடத்தலில் ஈடுபடுபவர்களுக்கு கடும் தண்டனை அளிப்பதன் மூலமே போதைவஸ்து பாவிப்பதனால் ஏற்படும் தீங்குகளில் இருந்து எமது நாட்டு சமுதாயத்தை பாதுகாக்க முடியும். ஐஸ் என்றழைக்கப்படும் “கிரிஸ்டன் மெதாம்படெமின்” என்ற ஆபத்தான போதைப்பொருள், 2 கிராம் அளவுக்கு வைத்திருந்தாலே மரண தண்டனை விதிக்கும் வகையில், நச்சுப் பொருள், அபின், அபாயகர மசோதா திருத்தச் சட்டம், கடந்த 2022-நவம்பர்-19ஆம் தேதி நிறைவேற்றப்பட்டது.








போதைப்பொருள் விற்பனை முகவர்கள் முன்னதாக போதைப்பொருளை மாணவர்களுக்கு அறிமுகப்படுத்தி அவற்றை பழக்கப்படுத்தி அவர்கள் போதைக்கு அடிமையான பின்னர், அவர்களுக்கு போதைப் பொருளுக்கான பணத்திற்காக அவர்களையே போதைப்பொருள் வியாபாரிகளாக மாற்றுகின்றார்கள். வடக்கு கிழக்கில் பாடசாலைகளில் இருந்து இடை விலகும் மாணவர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. போதையுடன் தொடர்புடைய குற்றங்களில் நாளாந்தம் அடையாளப்படுத்தப்படும் பாடசாலை மாணவர்களின் எண்ணிக்கை நாளைய பிரளயத்தை கட்டியம் கூறி நிற்கின்றது.

நாளைய தலைவர்களாக, துறைசார் நிபுணர்களாக, சமுதாயத்தை தேசத்தையும் நல்வழிப்படுத்தும் முன்னோடிகளாக மாறவுள்ள மாணவர்கள் போதையின் பிடிக்குள் சிக்குவது ஏற்றுக்கொள்ள முடியாதது.

பாடசாலை வளாகத்திலும் மாணவர்கள் மத்தியிலும் தற்பொழுது பரிசோதனை நடவடிக்கை இடம்பெற்று வருகின்றது. பாடசாலை ஆசிரியர்களும் □ பெற்றோர்களும் □ சமூக தொண்டு நிறுவனங்களும் விழிப்புணர்வுடன் பொதுநல சிந்தனையுடன் செயற்பட்டு போதைப்பொருள் பாவனை அற்ற ஒரு சமூகத்தை உருவாக்க முன்வர வேண்டும். நாம் சுதாகரிக்காது நமது வீட்டில் இந்த பிரச்சினை இல்லையே என கடந்து செல்லும் அதே சுயநல மனோநிலையில் இருப்போமாயின் நமது வருங்கால தலைமுறையினர் நமது கண்முன்னே போதைப்பொருள் கலாச்சாரத்தால் சீரழிவதை யாராலும் தடுக்க முடியாது.

நாம் இன்றைய நிலையில் விரைந்து செயற்பட வேண்டிய தருணம். போதைப்பொருள் பாவனைக்கு எதிரான பரந்துபட்ட கட்டமைப்பை உருவாக்கி








விழிப்புணர்வை ஏற்படுத்துவது எமது அனைவரினதும் கடமையாகும். அதிகரித்துச் செல்லும் இந்தப் போதைப்பொருள் பாவனையைக் கட்டுப் படுத்துவதற்கான முறையான வேலைத்திட்டத்தை முன்னெடுப்பதற்கு அரசியல் தலைவர்கள், மதத் தலைவர்கள், சிவில் சமூகத்தினரும் முன்வர வேண்டும். இளம் வயதினரின் வேகங்களுக்கு ஈடுகொடுத்து, அவர்கள் மத்தியில் இலட்சியங்களை விதைத்து, அவர்களுடைய சாகச உணர்வுகளைச் சரியான திசையில் திருப்பி, தமிழ் இனத்தின் பண்பாட்டு விழுமியங்களை மீளுருவாக்கும் பொறுப்பு பாடசாலை சமூகம் உட்பட சமூகச் செயற்பாட்டாளர்கள், மதகுருகளுக்கும் சம்பந்தப்பட்ட எல்லாருக்கும் இருக்கிறது.

அந்தவகையில் கடந்த ஒரு வருடத்திற்கும் மேலாக அபயம் அறக்கட்டளை, சிவபூமி அறக்கட்டளை என்பவற்றோடு இணைந்து துமி அமையம் மாணவர்களுக்கான போதைப்பொருள் விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டத்தை "விழித்தவரெல்லாம் பிழைத்துக் கொள்வர்" எனும் பெயரில் செயற்படுத்தி வருகிறோம். பாடசாலைகள் தோறும் சென்று இளையவர்களுடன் கலந்துரையாடி இந்த விழிப்புணர்வு செயல் வடிவம் பெற்றுவருகிறது. இதனை மேலும் பலவழிகளில் சமூகமயப்படுத்த பல்வேறு போட்டிகளையும் அறிமுகப்படுத்தி பெறுமதியான பரிசில்களையும் வழங்க இருக்கிறோம்.

எனவே 2024 ஆம் ஆண்டானது போதைப்பொருளுக்கு எதிரான போரின் முக்கிய ஆண்டாக இருக்கப்போகிறது. 2023 ஆம் ஆண்டில் பெருமளவு போதைப்பொருள் சம்பந்தமான கைதுகள் நடைபெற்று பல கோடிக்கணக்கான போதைப்பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன. அதன் தொடர்ச்சியாக, " இந்த வருடம் முதல் எந்தப் போதைப்பொருளையும் தொட மாட்டேன்." எனும் உறுதி மொழியை எல்லோரும் எடுத்து, அதனை மெய்வருந்திக் காப்போமேயானால் எமது எதிர்கால சந்ததிக்கு நல்ல வகையில் வாழும் தேசம் ஒன்றை கையளிக்கலாம்.

**"மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம் வைகலும்
எண்ணில் நல்ல கதிக்கு யாதுமோர் குறைவில்லை."**



# தமிழரின் தனித்துவம்

# தைப்பொங்கல்



தமிழர் வாழ்வில் தைத்திங்களுக்கு ஒரு மரியாதை உண்டு. **'போனதெல்லாம் போகட்டும், வருவதாவது நலம் பயக்கும்.'** என்ற நம்பிக்கையில் தமிழர் அனைவரும் தை மாதத்தை வரவேற்பதற்காக தவமிருப்பது வழக்கம். அந்த நம்பிக்கையில் பிறந்ததுதான் **'தைப்பிறந்தால் வழி பிறக்கும்'** என்ற வழக்கம். அந்தத் தை மகளை வரவேற்கும் திருநாள்தான் தைத்திருநாள்.

இந்த உலகத்தின் சுழற்சி உழவர்களின் மேழி (ஏர்) வழியே செல்கிறது என்று மேழியின் மேன்மையை **'சுழன்றும் ஏர்ப் பின்னது உலகம் அதனால் உழந்தும் உழவே தலை'** என்றார் வள்ளுவர். மாறி மாறி வேறு பல தொழில்கள் செய்து வந்தாலும், ஏரால் உழுது பயிர் விளைவிக்கும் உழவுத் தொழிலைச் சார்ந்தே உலகத்தார் வாழவேண்டியிருக்கிறது. **ஏர்க்காலின் தயவிலே செங்கோலும் நடப்பதினால் ஏர்க்காலைத் தவிர எவர் காலையும் பிடிக்காதவர்கள் உழவர் பெருமக்கள்.** இந்த உழவர் பெருமக்கள் உழைப்பின் பயனை அனுபவித்துக்கொண்டாடும் திருநாளே உழவர் திருநாள். **'உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்.'** என்றான் எட்டயபுரத்து எழுச்சிக்கவிஞன் பாரதி. அந்த உழவனைப் போற்றும் நாள் தான் தமிழர் திருநாளாம் தைப்பொங்கல் திருநாள்.

பொங்கல் என்பதற்கு பொங்கிப் பெருகி வருவது என்று பொருள். களைந்து போட்டால் அது வெண்மையாகப் பொங்கும். மேகத்தின் பொங்கலாடுதல் போல் இருப்பதால், அந்த உணவுக்கும் பொங்கல் என்ற பெயர் வந்தது. பஞ்சு போல வெண்மையாக மேலெழுந்து மேகம் நின்றால் அதற்குப் பொங்கலாடுதல் என்று பெயர்.

**'ஏற்றுக உலையே! ஆக்குக சோறே..'** என்ற புறநானூற்றுப் பாடலின் அடி, பொங்கல் விழாவின் தொடக்க கால நிலையை நினைவு கூர்கிறது.

முதலாம் இராஜேந்திரன் சோழர் காலத்து திருவொற்றியூர் கல்வெட்டில் "புதியீடு" என்ற குறிப்பு உள்ளது. "புதியீடு" என்பதற்கு "முதல் அறுவடை" என்று

கல்வெட்டு ஆய்வாளர்கள் பொருள் குறிப்பிடுகின்றனர்.

விவசாயிகள் “அறுவடையில் ஒரு பங்கை” அரசனுக்கு/கோயிலுக்குக் கொடுக்கும் விழாவாக அது இருக்கலாம் என்று கூறுகிறார்கள். “புதியீடு” என்பது, புதுஇடு என்று பிரிபடும். புதிய (அறுவடையில்) ஒரு பங்கு என்று பொருள் கொள்ள முடியும். அறுவடைக்கு காரணமான இயற்கைக்கும், அதற்காகப் பயன் பட்ட உழவு மாடுகள், வீட்டில் உள்ள பால் தரும் பசுக்கள் மற்றும் கலப்பை போன்ற கருவிகள் அனைத்தையும் வணங்கும் திருநாளே பொங்கலாக அன்று கொண்டாடப்பட்டுள்ளது.

ஐம்பெரும் காப்பியங்களில் ஒன்றான மணிமேகலை ஆரம்பம் ஆகும் விழாவறை காதையில் ***‘இந்திர விழா’*** என்ற பெயரிலேயே பொங்கல் பண்டிகை கொண்டாடப் பட்டிருக்கவேண்டும் என அறிய வருகிறது. முதல் முதல் இந்திரவிழா கொண்டாட ஆரம்பிக்கையில் அதைப் பொது மக்கள் மன்றத்தில் முரசறைந்து தெரிவிக்கப்பட்டதாகவும், சுமார் 28 நாட்கள் விழா நடந்ததாகவும் தெரிந்து கொள்கிறோம். மேலும் அகத்திய முனிவர் இந்திரனுக்கு அழைப்பு விடுத்ததாகவும் இந்திரன் பூம்புகாருக்கு வந்ததாகவும் குறிப்புகள் கூறுகின்றன.

தற்காலங்களில் பொங்கலுக்கு முன்னர் வீட்டை அலங்கரித்துச் சுத்தம் செய்து பழையன கழிதல் போல் அந்தக் காலங்களிலும் வீட்டை மட்டுமின்றி நாடும், நகரங்களுமே சிறப்பாக அலங்கரிக்கப்பட்டன. நகர வீதிகளில் பழைய மணலை மாற்றி புது மணல் பரப்பினர். கமுகுக் குலைகளும், தென்னை ஓலைத் தோரணங்களும், வாழை மரங்களும் கட்டப்பட்டு, பொன்னாலான பாலிகைகள், பூரண கும்பங்கள் ஆகியவற்றால் வீடுகள், கோயில்கள், அரண்மனைகள் அலங்கரிக்கப்பட்டன. காவல் தெய்வங்கள் முதல் அனைத்துத் தெய்வங்களுக்கும் சிறப்பான வழிபாடுகள் நடத்தப்பட்டன. இயற்கையை இறைவனாகப் போற்றிய இனம் தமிழினம். வான் மழைக்குத் தலைவன் இந்திரன். மழைத் தெய்வம் ஆன இந்திரனைச் சிறப்பிக்கும் வகையில் அவனுக்கு நன்றி கூறும் வகையில் எடுக்கப்பட்ட இந்த விழா நாளில் பகைமையும், பசியும் நீங்கச் சிறப்பான பிரார்த்தனைகள் செய்யப்பட்டதோடு ஒருவருக்கொருவர் பகைமை பாராட்ட வேண்டாம் என்பதும் வலியுறுத்தப்பட்டது. ஒருவருக்கொருவர் பகையுள்ளவர்கள் விலகி இருக்கவேண்டும் என அறிவுறுத்தப்பட்டது. இப்படியாக ஆரம்பித்த இந்த விழா பின்னர் நாளாவட்டத்தில் கண்ணுக்குத் தெரியும் ஒரே கடவுளான சூரியனுக்காகக் கொண்டாடப்படும் விழாவாக மாறி இருந்திருக்கலாம். ஏனெனில் சூரியன் இருப்பதாலேயே நமக்கு மழை, ஒளி, எல்லாம் கிடைப்பதோடு உயிர்கள் வாழவும் முடிகிறது. மனிதர்களின் கண் கண்ட ஒரே தெய்வமாக சூரியனே இருந்து வருகிறது.

இப்பொங்கல் நாளனது சூரியனின் வான்வழிப் பயணத்தில் சூரியன் மகரராசிக்கு மாறும் நாள் என இந்துக்களால் நம்பப்படுகிறது. வான்வெளியில் வடக்கு நோக்கி சூரியன் நகரும் இந்த நாளில் இருந்து பகல் நேரம் அதிகரிக்கும் என்பதாலும் இது கொண்டாட்டத்தின் முக்கியகாரணமாகிறது. ஆடி மாதம் சூரியன் தென் திசை நோக்கிப் பயணம் செய்யும் காலத்தில் விதைக்கப்படும் விதைகள் அனைத்தும் இதற்குள் பூரணமாக அறுவடை செய்யத் தயாராகக் காத்திருக்கும். வருடத்தின் முதல் அறுவடையை அமோகமாகத் தங்களுக்கு அளித்த சூரியனுக்கு நன்றி கூறி மகிழ்கின்றனர் உழவர் பெருமக்கள்.

மேலும் பொங்கல் வைப்பதன் தாற்பரியம், உணவுக்கு நமக்கு உதவி செய்த பஞ்சபூதங்களையும் போற்றுவது ஆகும். மண்ணிலிருந்து நமக்குக் கிடைத்த பொருட்களை வைத்துச் சமைப்பது- முன்பெல்லாம் மண்ணாலாகிய அடுப்பிலேயே, மண்பானைகளிலேயே பொங்கல் வைப்பார்கள். காலக்கிரமத்தில் இது மாறிவிட்டாலும், மண் அடுப்பும், மண்பானையும் பூமித்தாயையும், அதில் பொங்கலுக்கு ஊற்றப்படும் பாலும், நீரும், தண்ணீரையும், எரியும் நெருப்பு அக்னியையும், பொங்கல் வேகும்போது கிளம்பும் ஆவி வாயுவையும், வெட்டவெளியில் பொங்கல் சமைத்துப் பின்னர் வெட்டவெளியிலேயே வழிபாடு நடத்துவது ஆகாயத்தையும் குறிக்கும் என்பார்கள்.

வயலில் விளைந்த அரிசியை புதுப்பானையில் இட்டு கருப்பஞ்சாறு, பசுவின் மடி சுமந்த பால், நெய், மழையில் நிறைந்த நீர் இப்படி இயற்கையின் கூறுகளை இணைத்து சுவையான பொங்கலைப் படைப்பர். வீட்டு முற்றத்தில் அழகான கோலம் இட்டு அதன் நடுவில் புது மண் பானையை வைப்பர். புதிய பானைக்கு புதிய மஞ்சளைக் காப்பாக அணிவிப்பர். பொங்கல் பொங்கி வரும்போது மனைவி மக்களுடன் கூடி நின்று “பொங்கலோ பொங்கல்! பொங்கலோ பொங்கல்!” என்று கூறி சூரியனுக்கு முதல் படைப்பை தருவார்கள்.

புதிய காய்கறிகளையும் சமைத்து தலை வாழையிலையில் படைப்பர். விவசாயத்தில் பயன்படுத்தப்படும்



கருவிகள் அனைத்தையும் சுத்தம் செய்து சந்தனம், குங்குமம் வைத்து வணங்குவார்கள்.

பொங்கல் வழிபாட்டில் பொங்கலோடு சேர்த்துக் கரும்பு, வாழைப்பழம், மஞ்சள் கொத்து, இஞ்சிக்கொத்து, வெற்றிலை, பாக்கு, தேங்காய் போன்றவைகளோடு ஏழுவகைக் கறிகளும் செய்யப்படும். அனைத்தும் வழிபாட்டில் வைக்கப்படும். அநேகமாக வழிபாடுகள் வீட்டின் கிழக்கு வாசல் நோக்கியே செய்யப்படும். அடுக்குமாடிக் குடியிருப்பில் இருந்தாலும் வீட்டின் வெளியே வந்து சூரியனுக்குக் கற்பூரமாவது காட்டுவார்கள்.

கரும்பு இனிப்பான சுவையை உடையது. ஆனாலும் அடிக்கரும்பே தித்திப்பு அதிகம் உடையது. நுனிக்கரும்பு உப்பாகவும் இருக்கும். அதோடு கரும்பில் நிறையக் கணுக்களும் காணப்படும். இந்தக் கரும்பின் கணுக்கள் வாழ்க்கையில் ஏற்படும் சோதனைகளைக் குறிக்கிறது என்றும் ஆரம்பத்தில் உப்புப் போல் கரிக்கும் வாழ்க்கை போகப் போக அடிக்கரும்பு போல் இனிக்கும் எனவும் கூறுவார்கள். மஞ்சள் கொத்துக்களும் வழிபடப்படுகின்றன. மேலும் பொங்கல் பானையில் மஞ்சள் கொத்துக் கட்டும் வழக்கமும் உண்டு. மஞ்சள் மஹாலக்ஷ்மிக்கு உரியது. மஹாலக்ஷ்மியாகவே கருதப்படும் மஞ்சளை அனைத்து சுபகாரியங்களுக்கும் பயன்படுத்துகிறோம். மஞ்சள் இல்லாத மங்கல காரியங்களே இல்லை. ஆகவே மஞ்சளைப் பொங்கல் பானையில் கொத்தோடு கட்டும் வழக்கம் ஏற்பட்டது.

தைப்பொங்கல் நாளின் மறுநாள் மாட்டுப் பொங்கல் தமிழர்களால் கொண்டாடப்படும் வழக்கமாகும். தொழுவத்திலேயே பொங்கல் பொங்கி கற்பூர தீபாராதனை காட்டப்பட்டு ஆவினம் வணங்கப்படும். உழவுக்கும், பால் தரும் ஆவினங்களுக்கும் நன்றி சொல்லும் முகமாக மாடுகளை நீராட்டி மாடுகளின் கொம்புகளை சீவி, பளபளக்கும் வகையில் வண்ணம் பூசி, கூரான கொம்பில் குஞ்சம் அல்லது சலங்கை கட்டிவிடுவார்கள். குங்குமப் பொட்டிட்டும் புதிய மூக்கணாங் கயிறு, தாம்புக் கயிறு அணிவித்தும் அலங்கரிப்பர். பசுக்களில் எல்லா தேவர்களும் இருப்பதாலும் பசுக்களை வணங்கி வழிபடும் நாளாக அந்நாளை கொண்டாடுகின்றனர். பொங்கிய பின் பசு, காளை, எருமை என அனைத்து கால்நடைகளுக்கும் பொங்கல், பழம் கொடுத்து மகிழ்வார்கள்.

நாம், நம் உறவு, சுற்றம், நட்பு , நமக்காக உழைக்கும் கால்நடைகள் ஆகியவற்றுடனும் சேர்ந்து மகிழ்ச்சியாக இருக்கவேண்டும் என்பதே பொங்கல் போன்ற பண்டிகைகளின் மகத்தான நோக்கம் ஆகும்.

***நன்றியுணர்வு எல்லோர் மனதிலும் பொங்கிப் பெருகி வாழ்வு இன்பகரமாய் இனிக்க வாசகர் அனைவருக்கும் இனிய தமிழ்ப் பொங்கல் வாழ்த்துகள்.***

# சிவத்தமிழ் விருது பெறும் பெருந்தகைகள்

அன்னை சிவத்தமிழ் செல்வியின் 99வது பிறந்தநாள் அறக்கொடை விழா எதிர்வரும் 07.01.2024 ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணி தெல்லிப்பழை துர்க்கா தேவி தேவஸ்தான அன்னபூரணி மண்டபத்தில் கலாநிதி ஆறு.திருமுருகன் தலைமையில் நடைபெறவுள்ளது. இந்த அறக்கொடை விழாவில் ஐந்து பெருந்தகைகள் சிவத்தமிழ் விருது வழங்கி கௌரவிக்கப்படவுள்ளனர்.



பேராசிரியர்
சி. சிவலிங்கராஜா



வைத்திய கலாநிதி.
சி. அருளானந்தம்



இளைப்பாறிய அதிபர்
மு.அருணாசலம்



இளைப்பாறிய விரிவுரையாளர்
திருமதி நாச்சியார் செல்வநாயகம்



நாதஸ்வர வித்துவான்
இ.கேதீஸ்வரன்

# வற் வலி

பாவற்காய் ஆனாலும் பாவம் பார்க்காது
நாவற்பழம் ஆனாலும் நளினம் ஏற்காது...!
சேவற்கொடியோன் சொன்னாலும் சேதி கேளாது....!
வற்றும்வரை
வற்றலாகும் வரை
வற்வரி வழங்கிடுக....!

என்கிறது அரசு!
ஏங்கிறது சனம்!




வரிக்கு மேல் வரி ஆபத்து
அதனால் வந்தது வற்
அதனால் வளர்ந்த நாடுகள் ஏராளம்
ஆனால் இலங்கை? அந்தோ பரிதாபம்!


அள்ளி எடுக்க ஆயிரம் இடம் இருக்கு!
கிள்ளி எடுக்கத்தான் அரசாணை வந்திருக்கு!
இருக்கும் இடத்தை விட்டு
இல்லாத இடம் தேடும் படலம்
இன்னும் தொடரத்தான் இருக்கு!

மரத்தால் விழுந்தவனை
மாடேறி மிதிக்கிறது!
வைத்தியம் பார்க்க வசதி எல்லோருக்கும் வாய்க்குதில்லை!
செத்த வீட்டுச் செலவைக் கேட்டால்
சாகவும் மனம் வருகுதில்லை!

இக்கரை மாட்டுக்கு
எக்கரையும் பச்சையில்லை..!

தொண்டரடிப்பொடியன்





# சித்திராங்கதா

63

காவ்யமோகன்

## முடிவுரை

நல்லை அரசவையின் நடுக் கூடத்தில் குருதிப் பெருக்கு ஓடிக் கொண்டிருந்தது. குருதி வடிய வடிய அந்த அழகிய வதனம் கூடத்தில் கிடந்த கோலத்தை சொல்லுவது அவ்வளவு எளிதல்ல. அந்தக்கணத்தில் அது நிகழும் என்று அவையில் யாரும் எதிர்பார்த்திருக்கவில்லை. சித்திராங்கதா ஏன் இப்படியொரு முடிவை எடுத்தாள்..? இனி இந்த ஆராய்ச்சி எதற்குதவப்போகிறது! மாண்டு போனவள் மீண்டும் நம்முன் வரப்போவது நடக்குமா என்ன!

குருதிக்கறையோடு கிடந்த சங்கிலியனது வாள் சித்திராங்கதாவின் கரங்களில் இறுகப்பற்றிக் கிடந்தது. வாசகர்களிற்கு ஞாபகம் இருக்கிறதா? அன்றொரு நாள்.. வருணகுலத்தானிற்கு வாள் வழங்கும் விழா நடந்த நாள்□ வருணகுலத்தானது வாளினை வழங்கியபிறகு சங்கிலியனது வாளை எடுத்து வந்த குருக்கள் இடறி விழுந்து வீரமாகாளி சந்நிதியில் அந்த வாள் தவறி விழுந்தது. ஏதோ அபசகுனம் என்று எல்லோர் மனதிலும் அன்று தோன்றியது உண்மை. ஆனால் அந்த வீரமாகாளி உணர்த்திய உண்மையை புரிந்து கொள்ளும் வல்லோர் நல்லூ ரில் அன்று இருக்கவில்லையே. அதே வாளால் நல்லை அரசவையில் இப்படியொரு பெண்கொலை நடைபெறப் போகிறது என்று யாரும் அன்று ஆருடம் கூறவில்லையே.

போரிற்கு செல்ல முன் சங்கிலியனது வாளில் இப்படியொரு சாபவடு குருதிக்கறையாய் படிந்து விட்டிருக்கக் கூடாது. எப்படியோ நிகழ்ந்து விட்டது. ஆம்! எம் கதாநாயகி எம்மை விட்டுப் பிரிந்துவிட்டாள். வேதனை மிகுதி என்றாலும் உண்மை அதுதானே...

நில்லுங்கள்... எம் வேதனை மிகுதி என்றால் எம் கதாநாயகன் நிலை? வருணகுலத்தான் பற்றி எம்மால் இக்கணம் சிந்திக்கவே முடியவில்லை! அவனது ஆசை நாயகி சிரம் நீங்கி கூடத்தில் கிடப்பதை அவன் சிந்தை எப்படி ஏற்கும்? மாவீரனிடம் இந்தச் செய்தியை யார் தெரிவிப்பார்கள்? எப்படி தெரிவிப்பார்கள்?

வீரத்திறன் குன்றாத வீரனின் தோள்களை களத்தில் கிழித்தது ஒரு வாள். எதிரியின் அந்த வாள் முதன் முதலாய் வருணகுலத்தான் குருதி கண்டது. என்ன நடந்து விட்டது? அவனிற்கு உண்மை தெரியாது. ஆனால் ஏதோ உணர்கிறான். இதுவரை நிதானம் குறையாத அவன் வேகம் தடுமாறுகிறது.

நல்லைக் கூடத்தின் குருதி வெள்ளத்தில் கூடிநின்றோரின் கண்ணீர் வெள்ளமும் கலந்தது. எல்லோரும் எழுந்து விழிநீர் வழிய நின்றனர். அச்சத்தில் மஞ்சரிதேவியை இறுகப்பற்றி கண்களை மூடி நின்ற மாருத வல்லி மெல்ல மெல்ல விழி திறந்தாள். வீரிட்டுக் கத்தினாள். அநியாயம் நிகழ்ந்துவிட்டதாய் பதறி துடித்தாள். தன்னால் தடுக்க முடியாமல் நிகழ்ந்துவிட்ட அநியாயத்தை ஏற்க இயலவில்லை சங்கிலிய மகாராஜாவால் .. இனி என்னவாகப்போகிறது? இப்படியொரு களங்கத்தில் இருந்து எப்படி விமோட்சனம் கிடைக்கப்போகிறது? எதுவும் புரியாமல் வடிந்த அரசரது கண்ணீர் அவையில் தெரிந்த அந்த இரத்தக் காட்சிகளை மறைத்துக் கொண்டிருந்தது.

காட்சிகள் மறைந்தன. காலங்கள் மாறின.

நல்லூரில் போர்மேகம் மூண்டது. தமிழர் படையும் பறங்கிப்படையும் ஒரு முடிவை நோக்கி முன்னேறி வந்தன. வெற்றிகளும் இழப்புகளும் மாறி மாறி போரிட்டுக் கொண்டன. நல்லூர் படையும் தஞ்சைப்படையும் இணைந்து பெரும்படையாய் நிற்கையில் பறங்கியன் படைக்கு வெற்றியின் பாதை தொலைதூ ரத்திலே இருந்தது.

ஆயினும் போர்தர்மங்கள் என்பதெல்லாம் தமிழர் படைக்குத் தானே.. பறங்கியனிற்கு வெற்றி மட்டுமே இலக்கு. அதை எந்த வழியில் பெறுவதற்கும் அவர்கள் தயார் நிலையிலே இருந்தார்கள். வன்னியத்தேவன் என்கிற நச்சு வலையை அதற்காக பயன்படுத்திக்கொண்டனர் பறங்கியர்.

போரின் வெற்றி வெகு அருகில் என ஐயமின்றி இருந்த இரவொன்றில் சங்கிலியனை தனிமையில் சந்தித்து சமாதானம் பேசி மன்னிப்புகோர விரும்பியதாய் வன்னியத்தேவனிடமிருந்து ஒரு வேண்டுகோள் வந்தது. தமிழ் மன்னர்களின் ஒற்றுமையை எப்போதும் விரும்பும் சங்கிலியமகாராஜா வன்னியத்தேவன் கேட்டதை கடைசியாய் ஒருமுறை நம்பினார்.

வன்னியன் வஞ்ச நெஞ்சினால் விரித்த துரோகத்தின் வலையில் தான் சங்கிலிய மகாராஜா சிக்கிக் கொண்டார். போர்ப்பாசறையில்

நிராயுதபாணியாய் நின்ற மகாராஜாவை மறைந்திருந்த வெள்ளெலிகள் சுற்றி வளைத்தன. விசாரணைக்காக என்றே போர்த்துக்கீசர் அரசரை அழைத்துச் சென்றனர். ஆனால் விசாரணைக்குப் பின் சங்கிலிய மகாராஜா திரும்பவில்லை. அடிமை சாசனத்தை ஒப்புக்கொள்கிறாயா என்ற கேள்விதானே அவர்களது விசாரணை. மறுத்த மகாராஜாவை நாடுகடத்த பறங்கியர் முனைந்தனர். பதினைந்து நாட்கள் கடற்பயணத்திற்கு பின் பாரதத்தின் மேற்கு கடற்கரையை ஒட்டிய கோவா தீவிற்கு சென்ற சங்கிலிய மகாராஜாவிற்கு தூக்குமரமே காத்திருந்தது.

சித்திராங்கதா மறைவிற்குப் பின் வருணகுலத்தான் யாரும் நெருங்கமுடியாத தொலைவில் தன்னிச்சையானான். அவனது போக்கும் நடத்தையும் பார்ப்போருக்கு புதிராய் தெரிந்தது. மிகவும் வித்தியாசமானான். அவனது சோகத்தை யாருடன் பகிர்ந்துகொள்ள அவன் விரும்பவில்லை. ஈழத்தில் தனித்து நின்றான். துணை என்று நினைத்தவள் துடிதுடித்து மாண்டதை அவன் காணவில்லை. கண்டவர்கள் சொன்னதையும் அவன் கேட்க விரும்பவில்லை. அவனது உலகில் ஏதோ ஒரு நம்பிக்கையில் அவன் உயிர் கொண்டிருந்தான்.

ஆயினும் தன்பணி மறவாது களமாடினான். பெருப்படைத் தளபதியாய்- உணரச்சியற்ற ஒரு சடப்பொருள் போல் - ஈவு இரக்கம் எதுவும் அறியா ஒரு அரக்கன் போல் - அவன் போரிட்டுக் கொண்டிருந்தான். சங்கிலிய மன்னன் சிறைபிடிக்கப்பட்ட அன்று கூட வருணகுலத்தான் ஒரு காத தொலைவில் நடந்த போரில் மாபெரும் வெற்றி கண்டிருந்தான். அவன் எதிரினில் அவனை வெல்லும் துணிச்சல் அன்று யாருக்கும் இருக்கவில்லை.

ஆயினும் துரோகத்தால் சங்கிலிய மகாராஜா வீழ்த்தப்பட்ட உண்மை வருணகுலத்தானிற்கு தாமதமாகவே தெரிந்தது. மிக்கபிள்ளை ஆராச்சியும், வருணகுலத்தானும் விரைந்து மன்னரை விடுவிக்க செல்கையில் மகாராஜாவை கொழும்பு கோட்டைக்கு கொண்டு சென்று விட்டதாய் தெரிவித்தனர். மன்னரைத் தேடிச் சென்ற அவர்களது அயராத முயற்சிகள் யாவும் காலம் கடந்துவிட்டன. மாமன்னரின் மரணச்செய்தியே அவர்கள் செவியை எட்டியது.

மாமன்னரின் மரணம் வெறுமனே செய்தியாக வந்தால் யார்தான் நம்புவார்கள்? அன்றும் யாரும் நம்பவில்லை.
களம்புகுந்து வெற்றி காணமுடியாத கயவர்கள் துரோகத்தின் போர்வையின் துணைகொண்டல்லவா ஈழவேந்தனை வீழ்த்திவிட்டார்கள்.

அரசரிற்கு உதவிப்படையாய் வந்தவன் அரசரின் முடிவோடு தஞ்சைக்கு திரும்பியிருக்க வேண்டும்.. ஆனால் வருணகுலத்தான் செல்லவில்லை. அவனது ஆடலரசி□ அவள் கண்ட கனவு.. அன்று முதல் வருணகுலத்தான் கொண்ட பணி

ஆனது. இராச்சியம், பரிபாலனம் எல்லாம் பறங்கியர் வசமானாலும்- அவளது கனவு அவனிடமிருந்து அகலவில்லை. எல்லாம் இழந்தபின்னும் அவள் நாட்டைக் காக்க அவன் நின்றான். தன்னவள் தாயாய் எண்ணிய நாட்டிற்காய் நின்று போராடுவதே தன்னவளின் உயிர் சுமந்து தான் நிற்பதன் சாட்சி என்று நம்பினான்.

யாழ்ப்பாணத்தை ஒட்டிய தீவுகளிலும் காடுகளிலும் நெடுநாள் தலைமறைவு வாழ்க்கை வாழ்ந்து வந்த வருணகுலத்தான் பறங்கியர் ஸ்தம்பித்திப்போகும் படி தொடர் தொல்லைகளை விளைவித்துக் கொண்டே இருந்தான்.

மாருதவல்லி அரசரின் மகள் என்ற உண்மை வெளியில் தெரிந்த பின் சங்கிலிய மன்னரின் சகாப்தமும் சரித்திரமும் இன்னும் முடியவில்லை என்று கூறி மாருதவல்லியை வருணகுலத்தான் மணந்து கொள்ளும்படி எல்லோரும் வற்புறுத்தினர். அடியோடு மறுத்து விட்டான் வருணகுலத்தான். சித்திராங்கதா உள்ளத்தில் எழுந்த முதல் அச்சம் உண்மையாகக்கூடாது என்பதில் அவன் உறுதி கொண்டிருந்தான்.

அவள் தன் காதலையே தனக்கு துணையாய் விட்டுச் சென்றதாய் நம்பினான். அவன் அந்தக் காதலின் துணையிலேயே களமாடிக் கொண்டிருந்தான். தன் காதலி கண்ட கனவு தேசத்தின் கதாநாயகனாய் தன்னை உருமாற்றிக் கொண்டான். அவளது எண்ணப்படி தானே முடிக்குரிய வேந்தனாகி களங்கமற்ற சித்திராங்கதாவின் சத்தியத்தை சாட்சியாக்கி முடியாள வேண்டும் என்று முடிவு கொண்டான்.

சங்கிலியன் மறைவிற்குப் பின் போத்துக்கீசரின் நேரடிஆட்சிக்குள் யாழ்ப்பாணம் உட்பட்டிருந்தது. யாழ்ப்பாணத்தை கைப்பற்றிய போத்துக்கீசர் அங்கிருந்த பல கோவில்களையே தமது உறைவிடமாக்கினர். இந்நிலையில் 1620 இன் தபசு காலத்தில் அதாவது யேசு உயிர்த்தெழுந்த ஞாயிறுக்கு முன்வரும் நாளொன்றில் வருணகுலத்தான தன் முதலாவது அதிரடித்தாக்குதலை ஆரம்பித்தான்.

யாழ் பண்ணைத் துறையில் அமைந்திருந்த மாதாகோவிலுக்குள் பதுங்கியிருந்த போத்துக்கீசரை குறிவைத்தே இத்தாக்குதலை வருணகுலத்தான் நடத்தினான். எனினும் போத்துககீசருடன் இணைந்திருந்த வன்னியர் படையினர் ஆலயத்தின் பின்புறமாக உள்ளே நுழைந்தனர். இதனால் பலம் பெற்ற போத்துக்கேயர் வருணகுலத்தான் தாக்குதலை முறியடித்தனர்.

மனம் தளராத வருணகுலத்தான் மீண்டும் அடுத்த நாள் நல்லூ ரில் தங்கியிருந்த போத்துக்கீசரின் தளபதியான பிலிப் டி ஒலிவேராவின் மீது மற்றுமொரு தாக்குதலை நடத்தினான். தஞ்சைப்படையும் எஞ்சிய நல்லைப்படையும் கொண்டே அவன் போராட்டங்களை வேகமாக முன்னெடுத்தான். ஆனாலும் நவீன

துப்பாக்கிகள் சகிதம் போராடிய போத்துக்கீசர்களே மீண்டும் வெற்றி பெற்றனர். எதனாலும் தன் இலக்கினின்று விலகாது தன்னவளின் கனவை நனவாக்க விடாது போராடினான் வருணகுலத்தான். தொடர்ந்த நாட்களொன்றில் பூநகரியில் ஈழவூர் என்னும் இடத்தில் பறங்கியருடன் மோதலில் ஈடுபட்டான். அந்த மோதலிலும் வெற்றி இல்லை. ஆனால் விவேகத்துடன் தப்பித்துக் கொண்டான்.

மீண்டும் 1620 கார்த்திகை மாதம் ஆயிரம் தஞ்சாவூர் படைகளை வருவித்து வருண குலத்தான் தெண்டைமானாற்றில் தரை இறக்கினான். வேகமாய் அப்படை நல்லூர் வரை முன்னேறிச் சென்று போராடியபோதிலும் அம்முறையும் அவனுக்கு தோல்வியே கிடைத்தது. எனினும் அந்தத் தாக்குதலில் பிலிப் டி ஒலிவேராவை பலமாக காயப்படுத்தினான் வருண குலத்தான். மீண்டும் அதே வேகத்தில் அடுத்த தாக்குதலுக்கு தன்னைத் தயாராக்கினான்.

போத்துக்கீசருக்கு எதிரான இத்தகைய கொரில்லாத் தாக்குதல்களை நல்லூர் சுதேச சமூகத்தின் உதவியுடனும் கடல் கடந்துவந்த தஞ்சைப்படைகளின் துணையுடனும் தொடர்ச்சியாக வருணகுலத்தான் மேற்கொண்டு வந்தான்.

வருணகுலத்தான் யாழ்ப்பாணத்தை வெல்ல முறையாக வியூகம் அமைத்து ஒரு பெருமுயற்சி செய்தான். நாகபட்டினத்திலிருந்து புதிதாக ஒரு பெரிய சேனையை வரவழைத்தான்.

நாகைபட்டணத்தில் இருந்து படை வந்து பருத்தித்துறையில் தரையிறங்கப் போகின்ற செய்தி ஒலிவேராவின் செவியை எட்டியது. உடல் காயமடைந்திருந்த ஒலிவேரா தனது மருமகனான தெமற்றே (Antonio de Mota Galuao) என்பவனோடு ஒருபறங்கியர்சேனையை அவசரமாய் அங்கனுப்பினான்.

நாகைபட்டிணத்திலிருந்து வந்த தஞ்சை சேனை வல்வெட்டித்துறையில் கரையிறங்கி அங்கிருந்த புட்கரணி குளக்கரையில் ஒரு பனந் தோப்பில் பாளையமிட்டிருந்தனர்.

இதனை எப்படியோ அறிந்த தெமொற்றா பறங்கிபடையுடன் அங்கு இரகசியமாக வந்து பதிவிருந்து மூன்றாம் சாமமாகும்போது போர்ப்பறை அறைந்து கூக்குரலிட்டான்.

தமிழர் படையினர் திகிலடிபட்டு குதிரைகளில் ஏறிப்போவோரும் திசைதப்பி அலைவோருமாய் கலைவுற்றனர். பறங்கி படையினர் பின்தொடர்ந்து அவர்கள் சிரங்கொய்தனர். எதிர்பாராமல் முற்றுகையிட்டுத் தாக்கிய போத்துக்கீசப் படையை முறியடிக்க நெடுநேரம் போராடினர் தமிழர் படையினர். நள்ளிரவில் நடந்த இத்தாக்குதலில் புட்கரணி குளக்கரையில் மூன்று மணித்தியாலத்தில் எண்ணூறு போர்வீரர்களும் அழிக்கப்பட்டதாக

குவேரஸ் பாதிரியார் தன் நூலில் குறிப்பிடுகின்றார்.

விழுத்தப்பட்டவர்களுள் யாழ்ப்பாண சிங்காசனம் வகிக்கும் நோக்கமாய் வந்திருந்த சேனநாயகமும்(தளபதி) ஒருவனாவன் என வருணகுலத்தானின் வீரமரணத்தை வரலாறு கூறுகின்றது.

ஆம்.. தன்னவளின் தாய்மண்ணிலே வீர மரணமடைந்தான் வருணகுலத்தான்.

நவீன துப்பாக்கிகள் மற்றும் வெடி மருந்துகள் கொண்ட பீரங்கிகளுடன் தற்துணிச்சலை மட்டும் துணையாகக் கொண்ட வருணகுலத்தானின் தொடர்ச்சியான இப்போராட்டங்கள் எதிரிகளாலும் அன்று மெச்சப்பட்டது.

நீண்டகூந்தலுடனும், அழகான தாடியுடனும் காணப்பட்ட வருணகுலத்தானது பெரிய தலை வெட்டப்பட்டு மரக்கிளை யொன்றில் குத்தப்பட்டு பறங்கியரால் காட்சிப்படுத்தப்பட்டது.

அந்த முகத்தைப்பார்த்த போர்த்துக்கேய கட்டளைத்தளபதி கொன்ஸ்டன் டி சா
"எப்படியொரு வீரப்பொலிவு.. இந்த கம்பீர முகத்தையுடைய மனிதன் இப்போது என் எதிரே நின்று விழிகளை திறந்து நோக்கினாலும் என் இதயம் அச்சத்தால் நடுக்கமுறும் என்பதில் சந்தேகம் இல்லை.." என சபையில் வெளிப்படையாக கூறினான்.

கடைசி வரை தன்னவள் கடைசியாய் சொல்லிவிட்டுப்போன வாக்கிற்காய் தன் மரணம் வரை விடாது முயன்றான் வருணகுலத்தான். எல்லாவற்றையும் இழந்த பின்னும் நல்லை மண்ணில் அவன் பொக்கிசமாய் காத்து வந்தது ஒன்றைத்தான். சங்கிலிய மகாராஜாவின் இராஜவாள்!

தன் கரங்களால் தன் சிரத்தையே கொய்த வீரமங்கையின்- தன் நாயகியின் - மணந்து கொண்ட மனையாளின் கடைசி கரமும் குருதி கறையும் பட்ட அந்த வீரவாளினை அருச்சொத்தாய் எண்ணி பேணி வந்தான்.

அந்த வாளே அவள் காதலின் - வீரத்தின் அடையாளச் சின்னம். காதலும் நிறைவேறவில்லை. கடமையும் நிறைவேறவில்லை. அவள் கனவும் நிறைவேறவில்லை.

விதி எல்லாவற்றையும் நடத்தி முடித்து விட்ட வெற்றிக் களிப்பில் இருந்தது.

வருணகுலத்தான் மரணம் உறுதியான பின் இராஜவாள் இராஜமந்திரியார் கைகளால் வீரமாகாளி அம்மன் ஆலயத்தில் சேர்க்கப்பட்டது. ஆடலரசி கண்ட கனவு போல் தமிழர்களின் மானமும் வீரமும் தலைநிமிர்ந்து நிற்கும் அந்தநாளிற்கான உறுதியான இராஜ கங்கணத்தை அன்னை வீரமாகாளியே அன்று முதல் ஏற்றுக் கொண்டு விட்டாள்.

*நன்றி!*

*விடைபெறுகிறாள் சித்திராங்கதா..!*



# நல்லூர்க் காவியம் நிறைவடைகிறது!

துமியின் வாசகர்களின் ஏதோபித்த ஆதரவைப் பெற்ற சித்திராங்கதா தொடர் துமி மின்னிதழின் தனிப்பெரும் அடையாளமாக இவ்வளவு காலமும் பயணித்து வந்திருக்கிறது. நல்லூர் இராசதானி காலத்து ஈழத்து வரலாறுகளை மையப்படுத்தி, ஆடலரசி ஒருத்தியின் காதலோடும் கண்ணீரோடும் இணைத்து ஒரு வெற்றிகரமான தொடர் கதையாக சித்திராங்கதா பூரணத்துவமடைந்திருக்கிறாள்.

எழுத்தாளர் காவ்யமோகனின் கன்னித் தொடர் என்பது இம்மியளவும் அவரது எழுத்துக்களில் தெரியாத வகையில் மிக விறுவிறுப்பாகவும், வரலாற்றுத் தேடல்களோடும் அழகாக இத் தொடரை நிறைவு செய்திருக்கிறார். அவருக்கு துமி குழுமம் என்றென்றும் கடைமைப்பட்டுள்ளது.

விரைவில் இந்த ஈழத்து வரலாற்றை மையப்படுத்திய இந்த தொடரை நாவலாக்கி வெளியிடுவதே நாம் அவருக்கு செய்யும் மிகச்சிறந்த மரியாதையாக இருக்கும் என்று எண்ணுகிறோம். அதற்கான முயற்சிகளில் இறங்கியுள்ள எமக்கு உதவ விரும்புபவர்களை இணைந்து பயணிக்க உடன் அழைக்கிறோம்.

அதோடு வாசகர்களாகிய உங்களது இத்தொடர் பற்றிய பின்னூட்டங்களை எமக்கு மின்னஞ்சல்(thumi2016@gmail.com) /முகநூல் வழியாக அனுப்பி வையுங்கள். வளர்ந்து வரும் எமது இளம் எழுத்தாளர் காவ்ய மோகன் தன்னை செதுக்கிக்கொள்ள அவை பெருதும் உதவும்.

நன்றி

ஆசிரியர்

# விழித்தவரெல்லாம் பிழைத்துக் கொள்வர் போட்டித் தொடர் ~ 01

கருப்பொருள்
வாழ்வை சூனியமாக்கும் போதைப் பொருள் பாவனை

அபயம், சிவபூமி மற்றும் துமி அமைப்புக்கள் இணைந்து நடத்தும் மாணவர்களுக்கான விழிப்புணர்வு போட்டிகளை தொடர்ச்சியாக நடத்த திட்டமிட்டு உள்ளோம்.

போட்டிகள்
1. கவிதைப் போட்டி
2. சிறுகதைப் போட்டி

பரிசு விபரம்
1. முதல் பரிசு (ரூபா. 10000.00)
2. இரண்டாம் பரிசு (ரூபா. 7500.00)
3. மூன்றாம் பரிசு (ரூபா. 5000.00)
4. விசேட பரிசுகள் (ரூபா. 2500.00 படி 03 பேர்)

பிரிவுகள்
1. தரம் 06 - தரம் 09
2. தரம் 10 - தரம் 13
3. பல்கலைக்கழக/ ஏனைய கல்வி நிறுவன மாணவர்கள்

## போட்டி நிபந்தனைகள்

1. ஆக்கங்கள் யாவும் குறித்த மாணவரின் சுயமான ஆக்கம் ஆகவும், இதற்கு முதல் வேறு ஊடகங்களில் பிரசுரிக்கப்படாததாகவும், வேறு போட்டிகளில் பங்குபற்றியிராததாகவும் இருத்தல் வேண்டும். இதனை குறித்த மாணவரின் ஆசிரியர் ஒருவர் உறுதிப் படுத்தி, கையோப்பமிட்டிருக்க வேண்டும்.

2. மாணவரின் முழுப்பெயர், தொடர்பு கொள்ளக்கூடிய தொலைபேசி இலக்கம், கற்கும் கல்வி நிறுவன பெயர், கற்கும் ஆண்டு/பிரிவு, தேசிய அடையாள அட்டை இலக்கம், தற்போதைய வதிவிட முகவரி என்பவற்றையும் ஆக்கத்தோடு இணைக்க வேண்டும்.

3. எந்தவிதமான சொற்கள் எண்ணிக்கை கட்டுப்பாடுகளும் ஆக்கங்களுக்கு கிடையாது.

4. ஆக்கத்தோடு, இலக்கம் 02 இல் குறிப்பிட்ட சுயவிவரங்களையும் உள்ளடக்கி, தபால் மூலம் எமக்கு 30.01.2024 ற்கு முதல் கிடைக்குமாறு அனுப்பி வைக்க வேண்டும்.

தபால் அனுப்ப வேண்டிய முகவரி

"விழித்தவரெல்லாம் பிழைத்துக் கொள்வர் போட்டித் தொடர் - 01",
சிவபூமி பாடசாலை,
கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில்,
யாழ்ப்பாணம்.

5. ஒருவர் இருவகை போட்டிகளிலும் பங்குபற்றலாம்.

6. நடுவர்களின் தீர்ப்பே இறுதியானது. மேற்கூறிய நிபந்தனைகளில் இருந்து விலகும் ஆக்கங்கள் நிராகரிக்கப்படும்.

# AI தொழில்நுட்ப சுவ சரியா அம்புலனஸ்
## முதற்கட்டமாக யாழ்ப்பாணத்திலும் கொழும்பிலும் ஆரம்பிப்பு

AI தொழில்நுட்பத்தை பயன்படுத்தி யாழ்ப்பாணம் மற்றும் கொழும்பில் நவீன முறையில் 1990 சுவ சரியா அம்புலன்ஸ் சேவை இடம்பெறவுள்ளது.

1990 சுவ சரியா, இலங்கையின் இலவச அம்புலன்ஸ் சேவையானது, கலப்பு யதார்த்தம் (Mixed Reality) மற்றும் செயற்கைத் தொழில்நுட்பம் (Artificial technology) ஆகியவற்றைப் பயன்படுத்தி அம்புலன்ஸ் மற்றும் மருத்துவரை ஒருங்கிணைக்கும் நாட்டின் முதல் அம்புலன்ஸ் சேவையாக மாறியுள்ளது.

“இணைக்கப்பட்ட அம்புலன்ஸ்”, உயிர்களைக் காப்பாற்றும் சுவ சரியாவின் பணியை மேலும் வலுப்படுத்தும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இதன் முன்னோடி திட்டமாக முதலில் கொழும்பு மற்றும் யாழ்ப்பாண மாவட்டங்களில் ஆரம்பிக்கப்படும் அதன் பின்னர் நாடளாவிய ரீதியில் விரிவுபடுத்தப்படவுள்ளது.

இது அவசரகால கட்டளை மற்றும் கட்டுப்பாட்டு மையத்தில் உள்ள அவசர சேவை மருத்துவருடன் அவசர மருத்துவ தொழில்நுட்ப வல்லுநரின் (EMT) தொலைநிலை இணைப்பை மேம்படுத்துகிறது.

EMT அணிந்திருக்கும் HoloLens உபகரணம் மற்றும் ஆம்புலன்ஸில் பொருத்தப்பட்டுள்ள பல கேமராக்கள் மூலமும் மருத்துவரின் கண்பார்வையை நிகழ்நேரத்தில் ஆம்புலன்ஸுக்குள் கொண்டுவரும்








தொழில்நுட்பத்தினால் மருத்துவர் நோயாளரை தெளிவாக கண்காணிக்க முடியும்.

மேலும், ஆம்புலன்ஸில் இணைக்கப்பட்டுள்ள அனைத்து மருத்துவ உபகரணங்களிலிருந்தும் பெறப்படும் தகவல்கள் மருத்துவரின் கணினித்திரையில் காட்சிப்படுத்தப்படுகிறது. இந்தத் தகவல்கள் HoloLens மூலம் EMT க்கும் காட்டப்படுவதால் நோயாளருக்கு சிகிச்சை அளிக்கும் போது EMT தனது தலையை நகர்த்துவதற்கான தேவை குறைக்கப்படுகிறது. HoloLens இல் சேர்க்கப்பட்டுள்ள அம்சங்கள், நோயாளர் மீது அதிக நேரம் கவனம் செலுத்தவும், ஆவண நேரத்தைக் குறைக்கவும் அதேநேரம் நோயாளரின் பராமரிப்பை மேம்படுத்தாவும் EMTக்கு உதவுகிறது.

அம்புலன்ஸிலுள்ள மருத்துவ உபகரணங்கள் மற்றும் ஏனைய மருத்துவ நுகர்பொருட்களை அடையாளம் காணுதல் மற்றும் கலப்பு யதார்த்த தொழில்நுட்பம் (Mixed Reality) மூலம் இரத்த நாளங்களை கண்டறிதல் உள்ளிட்ட கூடுதல் அம்சங்களும் எதிர்காலத்தில் சேர்க்கப்படும்.

## பழங்கால கப்பல்

நார்வே நாட்டில் ஓஸ்பெர்க் பகுதியில் நடத்தப்பட்ட அகழ்வாராய்ச்சியில் வைகிங் இன மக்களின் காலத்தில் உருவாக்கப்பட்ட கப்பல் ஒன்று கண்டெடுக்கப்பட்டுள்ளது. இது வைகிங்குகளின் கலைப் படைப்பையும், கப்பல் கட்டும் வல்லமையையும் பிரதிபலிப்பதாக உள்ளதாகக் கூறப்படுகிறது. இது 9 ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் உருவாக்கப்பட்டிருக்கலாம் என்று ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

வைக்கிங்குகள் என்றால், அண்டை நாடுகளிடமிருந்து பொருட்களையும் பெண்களையும் கொள்ளையடித்துச் செல் வோராகவே உருவகப் படுத்தப்பட்டுள்ளனர். ஆனால், அவர்கள் எப்படிப்பட்டவர்கள் என்று உலகுக்கு அறியச் செய்ய அகழ்வாராய்ச்சிக் குழுவினர் பல ஆண்டுகளாக இப்பகுதியில் தொல்லியல் ஆய்வில் ஈடுபட்டு வருகிறார்கள்.



# சர்வதேச விண்வெளி நிலையத்தில் காணாமல் போன தக்காளி பழங்கள் கண்டுபிடிப்பு.

சர்வதேச விண்வெளி நிலையம் (International Space Station) பூமியின் சுற்றுப்பாதையில் இருந்து 400 மீற்றர் உயரத்தில் உள்ளதுடன் அங்கு விண்வெளி வீரர்கள் இங்கு தங்கி, நிலையத்தில் பல்வேறு ஆராய்ச்சி மற்றும் பராமரிப்பு பணிகளை மேற்கொள்கின்றனர். இந்நிலையில் 2022 ஆம் ஆண்டில், நாசா விண்வெளி வீரர் ரூபியோ 371 நாட்கள் விண்வெளி நிலையத்தில் மண் பயன்படுத்தாது தக்காளியை வளர்த்துக்கொண்டிருந்தார் . ரூபியோவின் தக்காளி தோட்டம் விண்வெளியில் முதல் தக்காளி தோட்டமாக கருதப்பட்டதுடன் தக்காளி பழம் கிடைத்தபோது அது விண்வெளியில் விளைந்த முதல் தக்காளி என்ற பெருமையையும் பெற்றது.

ரூபியோ அன்று இரண்டு பழுத்த தக்காளிகளைப் பறித்து, அவற்றை ஒரு பிளாஸ்டிக் பையில் வைத்து சீல் வைத்து, வேறு வேலையில் இருந்து திரும்பியபோது, ஆய்வகத்தில் இருந்து தக்காளி காணாமல் போனது. எனினும் அங்கு பூஜ்ஜிய ஈர்ப்பு விசையின் காரணமாக அவை மிதந்து சென்று ஆய்வகத்தில் உள்ள பொருள்களின் குவியல்களுக்கு இடையில் மறைத்து இருக்கலாம் என்று நினைத்து, ரூபியோ அவர்களைத் தேடி நாட்களைக் கழித்தார். ஆனால் சந்திக்கவில்லை. இருப்பினும், ரூபியோ இரண்டு தக்காளிகளை சாப்பிட்டுவிட்டதாக குற்றம் சாட்டப்பட்டார். ரூபியோ அதை கடுமையாக மறுத்தார். இதனையடுத்து மனமுடைந்து விண்வெளி நிலையத்திலிருந்து ரூபியோ மீண்டும் பூமிக்கு வந்தார்,

எனினும் தற்போது பொலித்தீன் பையில் இருந்த இரண்டு காய்ந்த தக்காளிகள் ஓராண்டுக்குப் பிறகு தற்போது விண்வெளி நிலையத்தில் தங்கியிருக்கும் விண்வெளி ஆராய்ச்சி வீரர்களால் கண்டுபிடிக்கப்பட்டதாக அறிவித்துள்ளனர். பொலித்தீன் பையில் நீரிழப்பு மற்றும் சிறிது நசுக்கப்பட்டுள்ளதுடன். சில நிறமாற்றங்களைத் தவிர, அது புலப்படும் நுண்ணுயிர் அல்லது பூஞ்சை வளர்ச்சியைக் கொண்டிருக்கவில்லை. பழங்கள் கண்டுபிடிக்கப்பட்டமையால் ரூபியோ குற்றமற்றவர் என்பதை நிரூபிப்பதாக நாசா தெரிவித்துள்ளது.









# கிளிநொச்சியில் நடமாடும் நூலகம்...!


ஒரு ஆட்டோவை மாற்றியமைத்து உருவாக்கப்பட்ட, சிறுவர்களுக்கான புத்தகங்களைக் கொண்ட நகரும் நூலகம். அதைச் செயற்படுத்தி வருபவர் சமூக அக்கறையும் அர்ப்பணிப்பும் மிக்கவர். அவர் இந் நகரும் நூலகத்தைப் பாடசாலைகள் தோறும் எடுத்துச் சென்று பிள்ளைகள் பயன்பெறும் வண்ணம் பணியாற்றிவருகின்றார். கிளிநொச்சி மாவட்ட பாடசாலை மாணவர்களின் நலன்கருதி சிங்கப்பூரிலுள்ள தமிழ்ப் பெண்ணின் அனுசரணையில் நடமாடும் நூலகமொன்று உருவாக்கப்பட்டு செயற்படுத்தப்பட்டுவருகின்றது. இது நாளாந்தம் ஒரு பாடசாலை என்ற முறையில் மாதத்தில் 20 பாடசாலைகளுக்குச் சென்று மாணவர்களுக்கான நூலக வசதிகளை வழங்கிவருகின்றது.

தமிழ்ப் புத்தகங்கள் குறைவாக இருப்பதனால், இயலுமானவர்கள் அன்பளிப்பாக வழங்கினால், எமது எதிர்கால சந்ததி அறிவும் ஆற்றலும் பெற்று வளர, அச் செயல் வழிகோலும் என்பது நிச்சயம். காலத்திற்கு தேவையான மிக அருமையான பணி! செயற்படுத்தும் நல்லுள்ளங்களிற்கு மேலும் பணி தொடர வாழ்த்துகள்.






# சிந்திக்கப்படும் சிலைகள்



வி. குலக்சி
செ. சனிசியா
இரண்டாம் வருடம்
உளவியல் துறை

உலகளாவிய ரீதியில் பேசுபொருளாக உள்ள பிரச்சனைகளுள் கற்பழிப்பு என்பது சமூகத்தில் மிகப்பெரிய தாக்கத்தை ஏற்படுத்தும் வகையில் அமைந்துள்ளது. அபிவிருத்தி அடைந்த நாடுகளுடன் ஒப்பிடுகையில் வளர்முக நாடுகளில் இப்பிரச்சனை அதிகமாக காணப்படுகின்றது. குறிப்பாக அண்மையில் இந்தியாவின் மணிப்பூரில் "குக்கி" இனப்பெண்கள் இருவர் கற்பழிக்கப்பட்டமையை உதாரணமாக குறிப்பிடலாம்.

இந்த வயது பிரிவினர்தான் கற்பழிக்கப்படுகின்றார்கள் என்று கூற முடியாத அளவிற்கு குழந்தைகள் முதல் வயதான பாட்டி வரை கற்பழிப்பு இடம் பெறுகின்றது. ஆனாலும் கட்டிளமை பருவத்தினரே இதற்கு அதிகம் இலக்காகின்றனர்.

### கற்பழிப்பில் ஈடுபடுவதற்கான காரணிகள்

1. அதிகரித்து வரும் போதைப்பொருள் பாவனை.
2. பாலியல் கல்வி அறிவின்மை.
3. ஆரோக்கியமான பாலியல் நடத்தை குறித்த தெளிவின்மை.
4. பாலியல் செயற்பாடுகளில் அதீத ஆர்வம்.
5. ஆபாச படம் பார்த்தல்.

போன்றவற்றை குறிப்பிடலாம்.

சமூக கட்டமைப்பை சீரழிக்கும் வகையில் இடம்பெறும் கற்பழிப்பால் குறித்த நபர் உட்பட அவரது



குடும்பமும் பாதிக்கப்படுகின்றது. குறித்த நபரின் உடல்நிலையில் மாற்றம் அல்லது பலவீனம், கர்ப்பம் தரித்தல், கருக்கலைப்பு, தனிமை விரும்புதல், தற்கொலை எண்ணங்கள், வாழ்க்கையின் மீது பற்றின்மை, குற்ற உணர்விற்கு ஆளாதல், மன அழுத்தம் மற்றும் உள நெருக்கீட்டிற்கு பின்னரான மனவடு போன்ற உளதாக்கங்களுக்கு உட்படும் தன்மை, சமூகத் தொடர்புகள் குறைவடைதல் போன்றவற்றை குறிப்பிடலாம். இவை தவிர கற்பழிப்பால் பல உயிரிழப்புகளும் எமது நாட்டில் பதிவாகியுள்ளன.

## கையாளும் முறைகள்

### உளவளத்துணை வழங்கல்

துணைநாடி வருபவருக்கும் அவர்களுடைய குடும்பத்தினருக்கும் உளவளத்துணை மேற்கொள்ள வேண்டும். இதன்போது அவர்களுடைய தவறு எதுவும் இல்லை என்பதை உணரச் செய்வதோடு அவர்களுக்கு ஆதரவை வழங்குவதன் ஊடாக வாழ்க்கையை அடுத்த கட்டத்திற்கு கொண்டு செல்ல முடியும்.

### விழிப்புணர்வு திட்டங்கள்

எமது சமூகத்தில் இவ்வாறு பாதிக்கப்பட்ட நபர்களை இழிவுபடுத்தப்படும் தன்மையே அதிகமாக காணப்படுகின்றது. இதனால் அவர்கள் தம்முடைய பிரச்சினைகளை வெளிப்படையாக கூறுவதில்லை. எனவே சமூகத்தின் மத்தியில் இவ்வாறு பாதிக்கபட்ட நபர்களின் பிரச்சினைகளை எவ்வாறு வெளிக்கொண்டு வருவது? எவ்வாறு அவர்களை கையாளுவது? என்பது குறித்தும் விழிப்புணர்வூட்ட வேண்டும். தனி மனிதனிடம் ஏற்படும் மாற்றம் சமுதாயத்தை மாற்ற உதவும்.

### குடும்ப சிகிச்சை (Family therapy)

துணையாளர்களிற்கிடையிலான உறவுகளில் ஏற்படும் தாக்கத்தினை அல்லது துணையாளரை தீர்க்க இச்சிகிச்சை முறை பயன்படுத்தப்படுகின்றது. சிகிச்சையாளர் குடும்பத்தினரை நேரில்



சந்தித்து சித்திரவதைக்குட்பட்டவரின் நிலையினை அவர்கள் முன்னால் தெரியப்படுத்தலே இச்சிகிச்சையின் முக்கிய அம்சம். இதன்போது குடும்ப அங்கத்தினர் கற்பழிப்புக்குள்ளானதை விளங்கி அவருடன் ஒத்துழைப்பு வழங்க எதிர்பார்க்கப்படும் .

### ஆதரவுச் சிகிச்சை முறை (Supportive therapy)

**Insight therapy** ஆல் தனது உளரீதியான பிரச்சினைகளை வெளியே கொண்டுவர இயலாதவர்களுக்கு இந்த **Supportive therapy** நன்மையளிக்கும் . இந்த சிகிச்சையின் போது குறித்த நபரின் மனநிலை பரிசோதிக்கப்படும் . ஏனெனில் குறித்த நபர் கற்பழிப்பினால் பதகளிப்பு, உள்ளார்ந்த உறவாடுதலில் பாதிப்பு என்பவற்றை கொண்டு காணப்படுவதால் அவருடைய மனநிலை பரிசோதிக்கப்படுகின்றது. இந்த சிகிச்சைமுறை விளைவுக்குட்பட்டவர்களுக்கு வாழ்வதற்கான சாத்தியமான வழிகளில் கவனம் செலுத்துவதுடன் சமூகம் சார்ந்தும் கவனம் செலுத்துகின்றது.

**Eg:-** ( **Vocational Training Issues** )
தொழில் பயிற்சி பிரச்சனை தீர்த்தல்

### அறிகை சிகிச்சை ( Cognitive Therapy )

தீவிரமான மனவடுவினால் பாதிக்கப்பட்டவர்கள் தங்களைப் பற்றியும், தமது அனுபவங்கள், எதிர்மறையான வாழ்வு பற்றியும் எண்ணங்கள் கொண்டிருப்பர். இத்தகைய எண்ணங்களை மாற்றவே இது பயன்படும்.

**Eg:-** "மக்கள் என்னை இணைக்கமாட்டார்கள்"
"வாழ்வு அர்த்தமற்றது" போன்ற எண்ணங்கள்.

இவ்வாறாக பாதிக்கப்பட்டவரை பல சிகிச்சைகள் ஊடான கையாள முடியும்.





# மத வழிபாடுகளில் உள ஆற்றுப்படுத்தல் முறைகள்

செல்வி சு.கிருந்திகா
உளவியல் துறை
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

உலகளாவிய ரீதியில் அனைத்து மதங்களுமே தனி மனிதனது உடல், உள நன்நிலையை மேம்படுத்துவதற்கு பல நடைமுறைகளைக் கொண்டுள்ளன. இதன்படி உள ஆற்றுப்படுத்தலின் பாரம்பரிய முறைகள் பெரும்பாண்மையாக மத ரீதியான அடிப்படையில் பல வழிகளில் மேற்கொள்ளப்படுகின்றது. இவை பழைய முறைகளாக காணப்பட்டாலும் நம்பிக்கை என்ற அடிப்படையில் இன்று வரை பேணப்படுவதை காணமுடிகின்றது. இலங்கையைப் பொருத்தவரை இந்து மதம், கிறிஸ்தவம், இஸ்லாம், மற்றும் பௌத்தம் ஆகியவை முக்கிய மதங்களாகக் காணப்படுகின்றன. இவை ஒவ்வொன்றுமே அவை சார்ந்த வழிபாட்டு முறைகள் வழியாக உள ஆற்றுப்படுத்தல் சேவையை வழங்குகின்றன.

## இந்துமதம்

இந்து மதம் என்பது இந்தியாவில் தோன்றிய ஒரு மதமாகும். மேலும் இது பல்வேறு விதமான நம்பிக்கைகள், நடைமுறைகள், மற்றும் சடங்குகளுக்கு பெயர் பெற்றது. பிரார்த்தனை இந்து மதத்தின் இன்றியமையாத அம்சமாகும். மேலும் இந்து மதத்தில் மந்திரம் ஓதுதல், பூஜை, ஹவன் போன்ற பல பிரார்த்தனை முறைகள் காணப்படுகின்றன. இவை சுய உணர்தல் மற்றும் உள அமைதியை அடைவதின் முக்கியத்துவத்தை வலியுறுத்துகிறது. இதன்படி இந்துமத வழிபாடுகளில் காணப்படும் தியானம் மற்றும் நினைவாற்றல் பயிற்சி நுட்பம் முதலிய உளஆற்றுப்படுத்தல் முறைகள் இந்து மதத்தவர்களின்

உள ஆரோக்கியத்தை மேம்படுத்த உதவுகின்றது.

இவை தவிர அலகு குத்துதல், பாற்செம்பு, காவடி, விரதம் முதலிய நேர்த்திக்கடன்கள், பாவம் கழுவப்பட காசிக்குப் போதல், தான தர்மம் செய்தல் (உ-ம் : மடங்களில் உணவு கொடுத்தல்), திருவிழாக்கள், பேயோட்டுதல், கலைவழிக்குணமாக்கல் முறைகள் (உ-ம் : கூத்துக்கள், கும்மி, கோலாட்டம், நாடகங்கள்) ஏனைய சடங்காச்சாரங்களாகிய சோறூட்டுதல், காதுகுத்துதல், பூப்புனித நீராட்டு விழா, திருமணச்சடங்கு, மரணச்சடங்கு, தைத்திருநாள், பார்வை பார்த்தல், வாக்கு கேட்டல், விபூதி போடல், விற்றுவாங்குதல், கரும்பாம்பு செம்பாம்பு, சோதிடம், சாஸ்திரம் முதலியவற்றையும் குறிப்பிடலாம்.

மேற்குறிப்பிட்ட முறைகள் மக்கள் ஒன்றுகூடுவதற்கான புதிய சூழலை உருவாக்கிக் கொடுத்தல், ஏனைய நபர்களுடன் தமது உள்ளக்கிடக்கைகளை பகிருவதற்கான வாய்ப்பை ஏற்படுத்தல், உள நெருக்கீட்டுக்கு காரணமாக மக்கள் உணரும் தமது பாவங்களிலிருந்து வெளிவருவதற்கான வழிகளைக் காண்பித்தல், இன்பமான தினங்களில் உறவுகளை அழைத்து ஒன்றுகூடி அன்பைப் பரிமாறி ஆசீர்வாதங்களைப் பெற உதவுதல், துன்பமான நாட்களில் உறவுகள் இணைந்து ஒருவரை ஒருவர் ஆற்றித்தேற்றி கட்டித்தழுவி தம் கண்ணீரைப் பகிர்ந்து குறித்த இழப்பு மற்றும் இறப்புத்துயரிலிருந்து வெளிவரச் செய்தல், எனப் பல்வேறுபட்ட வழிகளிலும் உள ஆற்றுப்படுத்தலை முன்னெடுக்கின்றன. இவை எதிர்மறை எண்ணங்கள் மற்றும் பழக்கவழக்கங்களை கைவிட உதவுகின்றன. எல்லோரையும் வரவழைத்து மேற்கொள்ளப்படும் சடங்குகள் வழியாக (உ-ம் : திருமணம், பூப்புனித நீராட்டு விழா) உள்ளமானது புதிய சூழலுக்கு பழகும் உள ரீதியான தயார்நிலையை உருவாக்குகின்றது.

## கிறிஸ்தவம்

கிறிஸ்தவம் என்பது மத்திய கிழக்கில் தோன்றிய ஒரு ஏகத்துவ மதமாகும். இது இயேசுகிறிஸ்துவின் வாழ்க்கை மற்றும் போதனைகளை அடிப்படையாகக் கொண்டது.






கிறிஸ்தவர்கள் செபமாலை கூறுதல், மௌன ஜெபத்தில் ஈடுபடுதல் மற்றும் நேர்த்திக்கடன்கள் முதலிய வகைகளில் வழிபாடுகளைச் செய்கின்றனர். கிறிஸ்தவ மத வழிபாட்டு முறைகள் மன்னிப்பின் முக்கியத்துவத்தையும் கடவுளுடனான தனிப்பட்ட உறவின் வளர்ச்சியையும் வலியுறுத்துகின்றது. நேர்த்திக்கடன்(உ-ம் : மாதா, அந்தோனியார், குழந்தை இயேசு), மக்களை ஒன்றுகூடச் செய்து ஆறுதலான வார்த்தைகளைப் பகிர்ந்து அன்பையும் இன்பத்தையம் துன்பத்தையும் பரிமாறி ஒத்துணர்வு, புரிந்துணர்வுள்ள உறவுகளை வலுப்படுத்தச் செய்யக்கூடிய வழிபாடுகள் (உ-ம்: பிறந்ததின, திருமணதின, துன்பதின வழிபாடுகள், வீட்டு ஜெபக்கூட்டங்கள், அன்பியங்கள்), இறைவனோடுள்ள உறவை வலுப்படுத்தக்கூடியதும் ஒருவர் தன் தவறுகளை உணர்ந்து அவற்றைத் திருத்திக்கொள்ளவும் மன்னிப்புப்பெறவும் சந்தர்ப்பங்களை ஏற்படத்தும் ஜெபங்கள் (உ-ம்: துதி, நன்றி ஜெபம், பாவமன்னிப்பு ஜெபம்) பாவமன்னிப்பு ஜெபத்தின் மூலம் ஒருவர் கண்ணீர் விட்டு அழுது தன்னிலை உணரவும் மன ஆறுதலைப் பெறவும் நேர்மறையான புது வாழ்வுக்கான வழிகளைக் காணவும் முடிகின்றது. ஒத்த குழுவினரை ஒன்றிணைத்து மேற்கொள்ளும் பணிகள் (உ-ம்: சிறுவர்கள், வாலிபர்கள், பெண்கள், சார்ந்த பணிகள்) இத்தகைய பணிகள் வழியாக நிகழ்த்தப்படும் விளையாட்டுக்கள், மன்றாடல்கள், பிரசங்கங்கள் குறித்த குழுவினர்களில் சிறந்த உறவு நிலைகளை, புரிந்துணர்வை, மகிழ்ச்சியையும் உள ஆரோக்கியத்தையும் ஏற்படுத்துகின்றன.

## இஸ்லாம்

இஸ்லாம் என்பது அரேபிய தீபகற்பத்தில் தோன்றிய ஒரு ஏகத்துவ மதமாகும். இது முகமதுநபியின் போதனைகளை அடிப்படையாகக் கொண்டது. முஸ்லிம்கள் ஒரு நாளைக்கு ஐந்து முறை



வழிபடுகின்றனர். இவ் வழிபாடுகளில் திருக்குர்ஆனின் வசனங்களை ஓதுதல் மற்றும் குனிந்து வணங்குதல் ஆகியன அடங்குகின்றன. தூ ஆ எனும் பிரார்த்தனை முறை வழியாக முஸ்லிம்கள் கடவுளின் வழிகாட்டுதலைப் பெறுவதோடு பாதுகாப்பு மற்றும் மன்னிப்பைக் கேட்கின்றனர்.

இஸ்லாம் மதமானது உள ஆற்றுப்படுத்தலின் முக்கிய அம்சங்களாகிய சுய பரிசோதனை மற்றும் சுய பிரதிபலிப்பு ஆகியவற்றை கொண்டுள்ளது. ஆத்தோடு தனிநபர்கள் தங்கள் எண்ணங்கள் மற்றும் செயல்களுக்கு அவர்களே பொறுப்பேற்கவும் அவர்களது நடத்தைகள், பண்புகளை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் ஊக்குவிக்கின்றது. இவை தவிர நேர்த்தி, மக்கா போதல், நோன்பு, தர்மம்செய்தல், பாவப்பரிகாரம் (உ-ம்: உழைத்து 60 ஏழைகளுக்கு உதவுதல்) முதலிய முறைகளும் உள ரீதியான ஆற்றுதல்களையும் தேற்றுதல்களையும் வழங்குகின்றன.


## பௌத்தமதம்

பௌத்தமதம் இந்தியாவில் தோன்றிய ஒரு மதமாகும். இது புத்தரின் போதனைகளை அடிப்படையாகக் கொண்டது. பௌத்தர்கள் மனநிறைவு, தியானம், அன்பான கருனை தியானம் போன்ற பல்வேறு தியான நுட்பங்களில் ஈடுபடுகின்றனர். பௌத்தமத வழிபாட்டு முறைகள் உள அமைதி மற்றும் இரக்கம் ஆகியவற்றை வளர்ப்பதை வலியுறுத்துகின்றது. அத்தோடு உள ஆற்றுப்படுத்தலின் செயற்பாடுகளாகிய ஒருவர் தன்னைப்பற்றியும் பிறரைப்பற்றியும் நேர்மறையான எண்ணங்களை வளர்க்கவும் நினைவாற்றலை அதிகரிக்கவும் ஊக்குவிக்கின்றது. இவை தவிர கலைவழிக்குணமாக்கல் முறைகளையும் குறிப்பிடலாம். (உ-ம்: பெரகரா, கொகம்பரா, மங்கலிய, மற்றும் பேய்நடனம்)



இதன்படி மேற்குறிப்பிட்ட மதங்களில் பேணப்படுகின்ற வழிபாட்டு முறைகள் தம்மைப் பின்பற்றுபவர்களுக்கு வழிகாட்டுதல்களையும் ஆதரவையும் வழங்குகின்றன. ஒவ்வொரு மதமும் பிரார்த்தனை மற்றும் வழிபாடு தொடர்பாக வெவ்வேறுபட்ட தனித்துவமான அணுகுமுறைகளைக் கொண்டுள்ளன. அவை மதம் சார்ந்த நம்பிக்கைகள், நடைமுறைகளின் பன்முகத் தன்மையைப் பிரதிபலிக்கின்றன. இத்தகைய வழிபாட்டு முறைகளைப் புரிந்து கொள்வதன் மூலம் உள ஆற்றுப்படுத்துனர்கள் தம்மிடம் சேவை நாடி வரும் துணைநாடுனர்களுக்கு அவர்களது கலாசார மற்றும் வழிபாடு சார்ந்த பொருத்தமான ஆதரவை வழங்க முடியும்





## கண்ணாடிப் பெட்டியில் இயேசு சிலை

காசா மக்களுக்கு ஆதரவளிக்கும் வகையிலும், போரை நிறுத்த வலியுறுத்தியும் பாலஸ்தீனம் உள்பட பல்வேறு பகுதிகளில் வசிக்கும் மக்கள் கிறிஸ்துமஸ் கொண்டாட்டத்தை தவிர்த்தனர். இதில் பெத்லகேமில் பிஷாரா எனும் பெண் ஒருவர், குழந்தைகள் கொல்லப்படுவதற்கு எதிர்ப்பு தெரிவித்து கிறிஸ்துமஸ் நாளில் தேவாலயத்தின் முன்பு இன்குபேட்டரில் குழந்தை இயேசு சிலையை வைத்து கவனத்தை ஈர்த்துள்ளார்.





த.விதுர்ஷன்
மாணவன், கொழும்பு பல்கலைகழகம்.

# தற்கொலைகளால் தடமழியும் தலைமுறைகள் 4

புது வருடம் புது எண்ணங்கள் புது எதிர்பார்ப்புகள் புது நம்பிக்கைகளோடு காலெடுத்து வைக்கின்றோம், இனி வருகின்ற நல்வருடம் எம் சமூகத்தில் ஓர் விடியல் போக்கும் சிந்தனை தெளிவும் ஏற்படுத்திட இயற்கையும் இறையும் வழி செய்திட வேண்டும். தற்கொலை என்பது எந்த பிரச்சனைக்கும் தீர்வு இல்லை, உங்கள் தற்கொலையால் யாரும் எதையும் இழக்க மாட்டார்கள். ஆனால், நாம் நம் வாழ்க்கையை, நம் சிரிப்பை, இன்பத்தை, நம் அனுபவங்கள், நம் சிறு சிறு சந்தோசங்களையும் இழக்கிறோம், நம் வாழ்க்கையை முழுவதுமாக இழக்கிறோம் என்பதை மறந்துவிடாதீர்கள். இறந்த பின்பு சமூக ஊடகங்களில் ஒரு கதையை வெளியிடுவார்கள், ஓரிரு நாட்கள் சோகமாக இருப்பார்கள். ஆனால் பெற்றோரின் வலி மற்றும் அவர்கள் உங்கள் மீது அவர்கள் பொழிந்த அன்பு? அந்த வலி ஈடுசெய்ய முடியாதது.

உறவுகள் எவ்வளவு நெருக்கமாக உள்ளனர் என்பதைப் பொருத்து, அவர்களின் நினைக்கக்கூடிய நாட்கள் நீடிக்கும். அது ஒரு வருடம் அல்லது 5 அல்லது 10 வரை இருக்கும். பிறகு அவர்கள் தங்கள் வழக்கமான பணிக்கு திரும்பிவிடுவார்கள். தங்கள் வாழ்க்கையை வாழ தொடங்குகிறார்கள். வாழ்க்கையில் அதன் ஓட்டத்தில் உங்களின் நினைவு சாதாரணமாக மாறிவிடும். இழப்பு உங்களுக்கு மட்டுமே,

உங்கள் மீதமுள்ள வாழ்க்கையை நீங்கள் இழக்கிறீர்கள். உங்கள் சொந்த அழகையும் புன்னகையையும் அனுபவிக்க தவறுகிறீர்கள். உங்கள் பல வருட புன்னகையை இந்த தருணத்தில் இழக்கிறீர்கள் என்பதே தற்கொலைக்குப் பின்னால் உள்ள கசப்பான உண்மை.

தற்கொலை எண்ணம் வரும்பொழுது நிகழ்காலத்தையும் கடந்த காலத்தையும் பற்றி யோசிக்கவே கூடாது. எல்லோருக்குமே எதிர்காலம் என்ற ஒன்று உண்டு. கடினமான சூழலை எதிர்கொள்ள இந்த நேரம் சிறப்பானதாக இல்லாமல் இருக்கலாம். ஆனால், நிச்சயமாக வாழ்க்கையும் , அனுபவங்களும் , வயதும் எல்லா சூழலையும் கடப்பதற்கான பக்குவத்தை ஏற்படுத்தும் என்பதை மறந்துவிடக்கூடாது.

தற்கொலை என்ணத்தில் இருக்கும் நபர்களில் பெரும்பாலோனோர், யாரிடமாவது ஆறுதல் தேடி அலைவார்கள். அல்லது



தனிமையில் தங்களை கிடத்திக் கொள்வார்கள் . அப்படியானவர்கள் உங்கள் நண்பர்கள் அல்லது நெருக்கமானவர்களாக இருந்தால், அவரின் நலனில் உங்களுக்கும் பங்கிருக்கிறது. தற்கொலை செய்ய நினைப்பவர்களுக்கு யாருடனும் இருக்கவே பிடிக்காது. சமூகத்தில் இருந்து தனித்து வாழவே விரும்புவார்கள். தன்னிடம் இருக்கும் பொருட்கள் அல்லது பிடித்தமானவற்றை அடுத்தவர்களிடம் கொடுப்பார்கள். Mood swings என சொல்லக்கூடிய அதிகப்படியான மனநிலை மாற்றதுடன் காணப்படுவார்கள்.

வாழ்க்கையில் கவலைகளும், துன்பங்களும் வந்து கொண்டுதான் இருக்கும். அவைகளை தற்காலிகமாக்குவதும், நிரந்தர மாக்குவதும் நாம் கையாளும் விதத்தில் தான் உள்ளது. தற்கொலை என்பது எதற்கும் தீர்வு ஆகாது. வாழ்க்கைக்கான நோக்கத்தைப் பற்றிய தெளிவும் அதை அடைவதற்கான வழிகளையும் கண்டறிய துவங்கினால் வாழ்க்கை சுவாரஸ்யமானதாக இருக்கும். எமது மூளையின் சிந்தனையின் செயற்பாடானது இன்னமும் முழுமையாக அறியப்படாத, மிகவும் சிக்கலான, ஆனால் ஆழமான செயன்முறையாகும். அன்பு, பாசம், காதல், கோபம், வெறுப்பு, வேதனை, துயரம், ஆற்றாமை, சிரிப்பு, அழுகை, சோகம் போன்ற உணர்வுகள் மனம் சார்ந்ததாகவும் மனமே எமது தனித்துவத்தை தீர்மானிப்பதாகவும் உள்ளது.

ஆனால் எமது உடலில் மனம் என்ற ஒரு அங்கம் இல்லை. எமது உணர்வோட்டங்களே மனமாகச் சித்தரிக்கப்படுகின்றன. எமது உடலில் சுரக்கின்ற ஹோர்மோன்களே எங்களில் உருவாகின்ற காதலையும் வெறுப்பையும் சந்தோசத்தையும் அழுகையையும் தீர்மானிக்கின்றனவேயொழிய சம்பவங்களோ நபர்களோ அல்ல என்பதே விஞ்ஞானபூர்வமானது. ஆனால் என்னாலும் எனக்கு வெளியே நின்று உணர்வை ஒதுக்கி வைத்துவிட்டு அவ்வாறு நோக்க முடிவதில்லை என்பதே உண்மை. நாம் எல்லோருமே ஒரு வகையில் உணர்வு வயப்பட்ட முட்டாள்கள். அதனால்தான் நாங்கள் விலைமதிக்க முடியாத உயிரைக் கூட சிறிய சம்பவங்களுக்காக, நபர்களுக்காக (அவை வெறும் இரசாயன மாற்றங்கள் என்று புரிந்துகொள்ளாமல்) மாய்த்துக்கொள்ளத் துணிகின்றோம்.

நாங்கள் எத்தனை வயதுள்ளவர்களாக வளர்ந்தாலும் எமது நாற்பதுகளையும் ஐம்பதுகளையும் தொட்டாலும் எம்மில் பெரும்பாலானவர்களுக்கு உணர்வு வளர்ச்சி என்பது ஒன்பது வயதைத் தாண்டுவதில்லை என ஆய்வுகள் தெரிவிக்கின்றன. எமக்கு உயிராபத்தான விடயங்களில் கூட ஒன்பது பேரில் எண்மர் சரியான முடிவை எடுப்பதில்லையெனவும் ஆய்வுகள் தெரிவிக்கின்றன. ஏன் இவர்கள் தற்கொலைக்கு உந்தப்படுகின்றனர் என்ற கேள்விக்கான பதில் பல காரணிகளில் தங்கி இருக்கின்றது. அதில் மிகப் பிரதானமானது அவர்களுக்கு ஏற்படுகின்ற உளவியல் ரீதியான வலி. இந்தத் தாங்க முடியாத உளவியல் வலியில் இருந்து தப்பித்துக்கொள்வதே அவர்களுக்கு மிகப்பெரும் நிம்மதியைத் தருகின்றது.அதுவே தற்கொலைக்கான உந்துதலாக அமைகின்றது.

பொதுவாக அச்சம் உண்மைச் சம்பவங்களிலும் பார்க்க பீதியை ஏற்படுத்தக் கூடியது. தற்கொலைக்கு உந்தப்படுபவர்கள் இந்த அச்சத்தினால் ஆட்கொள்ளப்பட்டு விடுகின்றனர். இதனோடு ஒருவருடைய தனித்துவ பரம்பரையலகு, உணர்வுநிலை, உணர்வுப் பிரதிபலிப்பு, முடிவெடுக்கும் ஆற்றலின் பற்றாக்குறை என்பன தற்கொலைக்கு காரணமாகின்றன.

*தொடர்ந்து சிந்திப்போம்.....*



# அபயம் இரகசியம் பேணும்

## இலவச வைத்திய தொலைபேசி அழைப்பு சேவை

# 071 07 12345



**மனநெருக்கடிகளில் இருப்பவர்களும், அவர்களது உள்ளம் உயிர் காக்க துணை நிற்பவர்களும் தொடர்பு கொள்ளக்கூடிய அவசர அழைப்பு**

(போதைப்பொருள் பாவனையில் இருந்து மீள நினைப்பவர்களும் இச் சேவையை பயன்படுத்தலாம்)



தங்களால் வழங்கப்படும் சுயவிபரங்கள் மற்றும் தகவல்கள் யாவும் இரகசியமாக பேணப்படும்.

**24 மணிநேரமும் வைத்தியரையும், ஆலோசகரையும் உடனடியாக தொடர்பு கொள்ளலாம்**

பாதிக்கப்பட்டவர்களோ அல்லது அவர்களை காண்பவர்களோ (உறவினர், நண்பர்கள், நலன்விரும்பிகள்) இச்சேவையை பயன்படுத்திக் கொள்ளலாம்.

பங்குனி 2021

அபயம் நிறுவனம்
மானிப்பாய், யாழ்ப்பாணம்

# படம் பேசும் கிரிக்கெட் 2023

2023 உலகக் கிண்ணத் தொடர் ஆரம்பிப்பதற்கு முன் உலகக் கிண்ணம் நாடுகளுக்கு சுற்றுலாவாக எடுத்து செல்லப்பட்டு காட்சிப்படுத்தப்படும். ஆப்கானிஸ்தானுக்கு உலகக் கிண்ணம் எடுத்து செல்லப்பட்ட போது எடுக்கப்பட்ட புகைப்படம் கண்களை கவர்ந்து பிரபல்யமானது.







சர்வதேச ஒருநாள் கிரிக்கெட்டில் விராட் கோஹ்லி தனது 50வது சதத்தை 2023ம் ஆண்டு உலகக் கிண்ணத் தொடரின் போது பெற்ற போது சச்சினின் சாதனையை முறியடித்தார். இதனை கொண்டாடிய போது விராட் கோஹ்லி.

இமாட் வாசிம்க்காக பதினொருவர் அணிக்கு வெளியே உட்கார வைக்கப்பட்டு இருந்த ஃபகர் சல்மான், பாகிஸ்தான் அணி உலகக் கிண்ணத் தொடரின் அரையிறுதிக்கு முன்னேற தடுமாறிய நிலையில் அணிக்குள் வந்து நியூசிலாந்து எதிரான போட்டியில் 400 என்ற இமாசலய இலக்கை துரத்திய போது கொண்டாடிய தருணத்தில் பாபர் அசாம் உடன்.



உலகக் கிண்ணத்தை வென்ற பின்னர் அவுஸ்திரேலிய சகலதுறை வீரரான மிட்சேல் மார்ஷ், உலகக் கிண்ணத்தின் மேல் கால்களை வைத்து எடுத்த புகைப்படம் இந்திய ரசிகர்களால் சர்ச்சை ஆக்கப்பட்டமை இரு கலாச்சாரங்களின் வேறுபாட்டை பிரதிலித்தது.






கிறிஸ்ட்சர்ச்சில், நியூசிலாந்து அணிக்கு இலங்கைக்கு எதிரான டெஸ்ட் போட்டியில் வெற்றி பெற இறுதி ஓவரில் 8 ரன்கள் தேவை என்ற நிலையில் எட்டு விக்கெட்டுகளை இழந்திருந்தது. கடைசிப் பந்தில் ஒரு ஓட்டத்தை வெற்றிகரமான ஓடிய பின் நியூஸிலாந்து அணித் தலைவர் கேன் வில்லியம்சன் மற்றும் நீல் வாக்னர்.

இந்திய அணிக்கு புதிய ஃபினிசர் இனங்காணப்பட்ட தருணம். 2023 ஐபிஎல் போட்டின் போது ஐந்து பந்துகளிலும் சிக்ஸர் போட்டியை வெற்றியில் முடித்துக் கொடுத்த கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணியின் இடதுகை துடுப்பாட்ட வீரரான ரிங்கு சிங். யுவராஜ் சிங், சுரேஷ் ரெய்னா போன்ற இடதுகை மத்தியதர வரிசை வீரர்கள் இல்லாமல் தவிக்கும் இந்திய அணிக்கு கிடைத்த வரப்பிரசாதம். இவருக்கு வருட இறுதியில் தென்னாப்பிரிக்கா தொடரின் போது வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.






மும்பையில் ஆப்கானிஸ்தான் அணிக்கெதிராக அவுஸ்திரேலியா அணி 91 ஓட்டங்களுக்குள் ஏழு விக்கெட்களை இழந்து தத்தளித்து தோல்வியின் விளிம்பில் இருந்த தருணத்தில் மேக்ஸ்வெல் உடன் இணைந்த பட் கம்மின்ஸ் அரணாக நிற்க மறுபுறம் மேக்ஸ்வெல், இரு கால்களும் சோர்ந்து கைகளையும் கண்களையும் கொண்டு சர்வதேச ஒருநாள் கிரிக்கெட்டில் மிகச் சிறந்த ஆட்டத்தை ஆடிய பின்னர் கிளென் மேக்ஸ்வெல், வான்கடே மைதானத்தின் வீரர்கள் உடைமாற்றும் அறைக்கு செல்லும் காட்சி.




டெஸ்ட் கிரிக்கெட்டில் இங்கிலாந்தின் பந்து வீச்சு ஜோடியான ஜேம்ஸ் ஆண்டர்சன் மற்றும் ஸ்டுவர்ட் பிரோட் அணிகளை கூட்டாக திணறடித்த காலம் பிரோட்டின் ஓய்வுடன் நிறைவுக்கு வந்திருக்கிறது. இங்கிலாந்து சார்பில் அதிக டெஸ்ட் விளையாடிய இரண்டாம் வீரராகவும் டெஸ்ட் கிரிக்கெட்டில் 600 விக்கெட் வீழ்த்தியவராகவும் திகழும் பிரோட், தன் டெஸ்ட் கிரிக்கெட் வாழ்வில் இறுதியாக வீசிய பந்திலும் விக்கெட் வீழ்த்தியவர் தான் எதிர் கொண்ட கடைசிப் பந்தில் சிக்ஸர் அடித்தும் இருந்தார்.




உலகக் கிண்ண இறுதிப் போட்டிக்கு முன்னரான ஊடக சந்திப்பில் சத்தத்திற்கு பெயர்போன இந்திய ரசிகர்களை மைதானத்தில் வாய் மூடி அமைதி காக்க செய்தே இலக்கு மற்றும் மகிழ்ச்சி என கூறி அடுத்த நாள் செய்து காட்டிய அவுஸ்திரேலிய அணியின் தலைவரான பட் கம்மின்ஸ். இவர் வீசிய பத்து பந்து மாற்றங்களிலும் எந்தவொரு நான்கு மற்றும் ஆறு ஓட்டங்களை கொடுக்கவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

## மேலும் சில தருணங்கள்









